# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Civil Procedure)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருப்பெரும்புதூர் 2019 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15-ம் நாள் சாட்சியாகிய கனகசபை என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10 வது சட்ட விதியின்படி பெஞ்ச் கிளார்க் திரு.எழிலரசு என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கனகசபை | வயது | 60 |
| த/பெ. (அ) க/பெ. | மணி | இனம் | ஆண் |
| கிராமம் | ஸ்ரீபெரும்புதுர் | தொழில் | தனியார் வேலை |
| சமயம் | | தாலுக்கா | ஸ்ரீபெரும்புதுர் |

**O.S.No.971/2008 c/w 753/2008**

**<u>குறுக்கு விசாரணை</u>** 15.10.2019 **வா.சா. 1** கனகசபை

வாதி நிறுவனம் பிரைவேட் லிமிடேட் கம்பெனி என்றால் சரிதான். நான் அங்கே இயக்குநராக உள்ளேன். என்னுடைய பெயர் நிறுவனத்தின் Articles of Association ல் உள்ளது. நான் நீதிமன்றத்தை நிறுவனத்தின் சார்பாக சாட்சியம் அளிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் மீது 2 வழக்குகள் உள்ளது என்றால் ஆமாம். அசல் வழக்கு எண் 971/2008 எங்கள் நிறுவனம் அந்த வழக்கில் உள்ள 3 பிரதிவாதிகள் மீதும் அசல் வழக்கு எண் 753/2008 என்ற வழக்கு வேறு இரண்டு வாதிகள் எங்கள் நிறுவனத்தின் மீது தாக்கல்செய்துள்ள வழக்கு என்றால்சரிதான். இது அல்லாது வேறு ஏதேனும் வழக்கு நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல்செய்துள்ளேன். அந்த வழக்கு அசல் வழக்கு எண் 114/2012 ஆகும். அந்த வழக்கு தற்போது நிலுவையில் இல்லை. அது காஞ்சிபுரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு. இந்த அனைத்து வழக்குகளும் ஒரே வழக்கு சொத்து குறித்தவைதான். இந்த வழக்குகள் அல்லாது அசல் வழக்கு எண் 753/2008 ல்உள்ள வாதிகள் இருவரும் தனித்தனியாக காஞ்சிபுரம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 125/2008 மற்றும் 126/2008 என்ற இரு வழக்குகளை எங்கள் நிறுவனத்தின் மீது தாக்கல்செய்த வழக்கு என்றால் ஞாபகமில்லை. அந்த இரண்டு

வழக்குகளும் சொத்துக்கு அந்த வழக்கின் வாதிகள்தான் உரிமையாளர்கள் என்று விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் ஞாபகமில்லை. அந்த இரண்டு வழக்குகளும் வாதிகளுக்கு சார்பாக தீர்ப்பாகி விட்டது என்றால் தெரியாது. அசல் வழக்கு எண் 971/2008 என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கின் பிரதிவாதிகள் தாவா சொத்தின் எங்கள் நிறுவனத்தின் அனுபவத்தை தடை செய்யக்கூடாது என கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். வழக்கு சொத்தின் புல எண் விவரம் 1490/1 மற்றும் 1490/2 ஆகும். மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 31 செண்ட் ஆகும். இந்த வழக்கு சொத்தை எங்கள் நிறுவனம் கிரையம் வாங்கினார்களா என்றால் இது வரை இல்லை. ஆனால் வழக்கு சொத்தின் அனுபவத்தில் உள்ளோம். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்த கிரைய ஒப்பந்தம் வாதசாஆ4 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றால் ஆமாம். 09/09/1991 ல் கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் ஆமாம். அந்த கிரைய ஒப்பந்த பத்திரம் எத்தனை புல எண்ணிற்கு போடப்பட்டது என்றால் 9 புல எண்ணிற்கு போடப்பட்டது. மொத்த விஸ்தீரணம் 9. 54 ஏக்கர்ஸ் ஆகும். கிரைய ஒப்பந்தத்தத்தில் விற்பனைதாரர் என்று 7 நபர்களின் பெயர் போடப்பட்டுள்ளது. எத்தனை நபர்களின் கையெழுத்துகள் போடப்பட்டுள்ளது என்றால் சந்திரசேகர் என்ற ஒருவர் மட்டும் கையெழுத்திட்டார். மேற்படி 9 புல எண்களில் 2 புல எண்களுக்கு மட்டும் அவரும் அவருடைய மகனும் உரிமையார்கள் ஆவார்கள். மேற்படி வாதசாஆ4ல் உள்ள ஒரு சொத்திற்குதான் சந்திரசேகர் உரிமையாளர். மற்றொரு சொத்திற்கு அவரது மகன் ரவீந்திரநாத் உரிமையாளர். மேற்படி ரவீந்திரநாத் வாதசா4 ல் கையெழுத்திடவில்லை. சந்திரசேகர் ரவீந்திரநாத் ஆகியோர் சொத்துக்களை தவிர மீதி சொத்துக்களை எங்கள் நிறுவனம் கிரையம் பெற்றுவிட்டது. மீதமுள்ள 7 புல எண்களை எந்த தேதியில் எங்கள் நிறுவனம் கிரையம் பெற்றது என்றால் ஆவணங்கள் பார்த்தால்தான் தெரியும். சுமாராக எந்த வருடம் என்று கூறமுடியுமா என்றால் 1992 ல் கிரையம் பெற்றோம். தாவா சொத்து சம்மந்தப்பட்ட அனைத்து மூல பத்திரங்களும் எங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று

நான் கூறியுள்ளேன் என்றால் ஆமாம்.மேற்படி சந்திரசேகர் மற்றும் ரவீந்திரநாத் ஆகியோரின் தாவா சொத்து குறித்த பத்திரங்களை நான் வாங்கி வைத்துள்ளேனா என்றால் இல்லை. மற்ற விற்பனையாளர்களிடமிருந்து மூல ஆவணங்களை வாங்கி வைத்துள்ளோம். மேற்படி வாதசாஆ 4 ல் உள்ள அனைத்து புல எண்களுக்கும் கிரைய தொகையாக எவ்வளவு ரூபாய் நிர்ணயிக்கப்பட்டது என்றால் ரூ.15,26,400/- ஆகும். ஒரு செண்டிற்கு ரூபாய் 1,600/- வீதம் நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் ஆமாம். அன்றைய தேதியில் ரூபாய் 1 லட்சம் முன்பணமாக கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த தொகையில் ரூபாய் 75,000/- டிமாண்ட் டிராப்டாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.அந்த 75,000/- டிமாண்ட் டிராப்ட் சந்திரசேகர் பெயருக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல அவர் பெயருக்குதான் கொடுத்துள்ளோம். மேற்படி சந்திரசேகர் பெயருக்கு அந்த டிமாண்ட் டிராப்ட் கொடுத்ததற்கு ஆதாரம் நான் நீதிமன்றத்தில்தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. நான் மேற்படி டிமாண்ட்டிராப்ட் சந்திரசேகர் பெயருக்கு கொடுக்கவில்லை என்றும், மற்ற விற்பனையாளர் பெயருக்கு தான் கொடுத்தோம் என்றால் சரியல்ல. உண்மையாகவே சந்திரசேகர் பெயருக்கு அந்த பணத்தை கொடுத்திருந்தால் ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்பித்திருக்க இயலும் நான் பொய்யுரைப்பதால்தான் ஆவணங்களை சமர்பிக்கவில்லை என்றால் சரியல்ல. வாதசாஆ4 பத்தி 4 ல் அதிலுள்ள சொத்துக்களை கிரையம் செய்து கொள்ளவில்லை என்றால் அந்த இடத்தின் அனுபவத்தை விற்பனையாளருக்கே கொடுத்துவிடவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் பத்தி 8ன்படி ஆறு மாத காலத்திற்குள் கிரையம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் அன்னப்பன் என்ற ஒருவர் மட்டுமே கையெழுத்திட்டுள்ளார் என்றால் ஆமாம். என்னுடைய தாவாவில் கிரைய தொகை முழுவதும் ரவீந்திரநாத் என்பவருக்கு கொடுத்துவிட்டதாக நான் கூறியுள்ளேன் என்றால் சந்திரசேகர் மற்றும் ரவீந்திரநாத் ஆகியோர்களுக்கு முழு கிரைய தொகையும்

கொடுக்கப்பட்டுள்ளது. எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ரூபாய் 5,29,600/- கொடுத்துள்ளேன். வாதசாஆ4 ன்படி மொத்த கிரைய தொகையே ரூபாய் 15,26,400/- என்றும் அதில் ரூ.5,29,600 போக மீதமுள்ள கிரைய தொகையை மற்ற விற்பனையாளருக்கு கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். வாதசாஆ4 ல் சந்திரசேகர் ரூபாய் 10,000/- 09/12/1991 அன்று பெற்றுக்கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதற்குக் கீழ் இருவர் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளார்கள் என்றால் ஆமாம். அவர்கள் நாராயணன் மற்றும் குருநாதன் ஆகும். அதில் குருநாதன் மற்றொரு விற்பனையாளர் ஆவார். நாராயணன் குறித்த விவரங்கள் தெரியாது. இந்த வழக்கில் நிறைய ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பபந்தம் கையெழுத்திட்ட பிறகு 1995 வரை பகுதி பகுதியாக கிரைய தொகைகளை சந்திரசேகர் மற்றும் அவரது மகன் ரவீந்திரநாத் பெற்றுள்ளார்கள். வாதசாஆ5 ல் உள்ள முதல் ரசீதில் ரவீந்திராநாத் கையெழுத்திட்டுள்ளார். அவர் அதில் தாவா புல எண்களை குறிப்பிட்டு கையெழுத்திட்டுள்ளார். அந்த ரசீது 24/08/1993 தேதியிட்டது ஆகும். என்னிடம் காட்டப்படும் ஜெனரல் பவர் பத்திரத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து ரவீந்திரநாத்தின் கையெழுத்து என்றால் சரிதான். அதில் உள்ள கையெழுத்தும் வாதசாஆ5 ஆன முதல் ரசீதில் உள்ள கையெழுத்தும் ஒத்து போகிறதா என்றால் ஒத்துபோகிறது. நான் பொய்யுரைக்கிறேன் என்றும் அது ஒத்துப்போகவில்லை என்றால் சரியல்ல. வாதசாஆ 4 ஒப்பந்தப்படி கிரையம் செய்து கொள்ளவில்லை எனில் அந்த ஒப்பந்தத்தின் பத்தி 12ன் படி நான் கொடுத்த முன்பணத்தை திரும்ப பெற்றுக்கொள்ளலாம் அதில் உள்ளது என்றால் ஆமாம். அவ்வாறு இருக்க சொத்தின் அனுபவத்தை நான் கோர இயலாது என்றால் சரியல்ல. சொத்தின் அனுபவம் கிரைய ஒப்பந்த காலமான 6 மாதத்திற்கு பிறகு மீண்டும் சந்திரசேகருக்கும் ரவீந்திரநாத்திற்கும் வந்து விட்டது என்றும் என்னிடம் இப்போது சொத்தின் அனுபவம் இல்லை என்றும் தவறாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கை 02/08/2006 அன்று உரிமையியல் நீதிமன்றம் திருவள்ளூரில் நான் தாக்கல் செய்தேன். இந்த வழக்கை

நான் தாக்கல் செய்தபோது முதல் பிரதிவாதி ரவீந்திரநாத் இரண்டாவது பிரதிவாதி எத்திராஜ் மூன்றாவது பிரதிவாதி எட்டியப்பன் ஆகியோர் மீது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 753/2008 ல் மணி நாடாருக்கு எத்திராஜ் பவர் ஏஜெண்ட் என்ற முறையில் 31/07/2006 அன்று எழுதி கொடுத்த கிரைய பத்திரம் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பத்திரம் என்றால் சரிதான். அதில் உள்ள புல எண் 1490/2 ஆகும். அதேபோல் அசல் வழக்கு எண் 753/2008 ல் 31/07/2006 அன்று எத்திராஜ் பவர் ஏஜெண்ட் என்ற முறையில் ராஜேந்திரனுக்கு எழுதி கொடுத்தது அது புல எண் 1490/1 ஆகும். இந்த இரண்டு ஆவணங்களும் 31/07/2006 அன்று கிரையம் செய்யப்பட்டது என்றால் ஆமாம். இந்த கிரையம் செய்யப்பட்ட பிறகுதான் 02/08/2006 தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். மேற்படி இந்த வழக்கில் மணி நாடாரையும் ராஜேந்திரனையும் நான் தரப்பினர்களாக சேர்த்திருக்க வேண்டும் என்றால் தேவையில்லை. தாவா தாக்கல் செய்ததேதியில் தாவா சொத்தின் அனுபவம் மணி நாடார் மற்றும் ராஜேந்திரனிடம் இருந்தது என்றும் அவர்களை தரப்பினராக சேர்க்காமல் தாக்கல் செய்த இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஒப்பந்த காலமான ஆறு மாத காலத்திற்குள் கிரையம் செய்யாததால் ஆறு மாத காலத்திற்கு பின் தாவா சொத்து அனுபவம் விற்பனையாளர்களிடம் சென்று சேர்ந்து விட்டது என்றும் அதனால் வாதியிடம் சொத்தின் அனுபவம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ரவீந்திரநாத் மற்றும் சந்திரசேகருக்கும் கிரையம் செய்து கொடுக்கும்படி வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால் இல்லை. அவர்கள் ஊரை காலி செய்து விட்டு சென்றதால் அனுப்பவில்லை. தாவாவில் ரவீந்திரநாத்திற்கு ஸ்ரீபெரும்பூதுர் முகவரிதான் போடப்பட்டது. அதன்படி தாவாவில் அழைப்பானை சார்வு செய்யப்பட்டு அவர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார் என்றால் ஆமாம்.அதனால் ரவீந்திரநாத் ஊரை காலி செய்து விட்டு சென்றுவிட்டார், என்று நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரத்தின் மீது Specific performance suit ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல்

செய்துள்ளோம். அது நீதிமன்றத்தால் திருப்பபட்டது. அது எந்த காரணத்தால் திருப்பப்பட்டது என்றால் வழக்கறிஞருக்குத்தான் தெரியும். அது திருவள்ளூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. நான் கூறுவது தவறென்றும் 2008 க்கு பிறகு ஸ்ரீபெரும்புதுர் நீதிமன்றம் வந்து விட்டது என்றும் திருவள்ளூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது என்றால் சரியல்ல. இந்த தாவா 971/2008 ல் உள்ள பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தின் மீதான உரிமை மாற்றம் செய்யப்பட்டுவிட்டது அதனால் அவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை வேண்டுகோளிக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.